## ‘நாம்தான் செய்து கொடுப்போம்’ என்கிற நம்பிக்கை, தமிழ்நாட்டு மக்களுக்கு நிறையவே இருக்கிறது!

# திட்டங்களையும் வாக்குறுதிகளையும் செய்து முடிக்க மீண்டும் ‘திராவிட மாடல் 2.0’ ஆட்சி அமைய வேண்டும்!

### நாட்றாம்பள்ளியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பரப்புரை!



**திருப்பத்தூர், ஏப். 3 –**

**தமிழ்நாடு முழுவதும் உள்ள சட்டமன்றத் தொகுதிகளில் தொடர் தேர்தல் பரப்புரையை கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். இதையொட்டி, நேற்று முன்தினம் ஜோலார்பேட்டை மற்றும் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதிகளின் வெற்றி வேட்பாளர்களுக்கு, நாட்றாம்பள்ளி பகுதியில் மக்களின் நம்பிக்கையைப் பெற்ற உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்தார்.**

**அப்போது அவர், ``பல திட்டங்களையும், கொடுத்திருக்கும் வாக்குறுதிகளையும் செய்துமுடிக்க வேண்டும் என்றால், வருகிற சட்டமன்றத் தேர்தலில், மீண்டும் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமையவேண்டும். நம் தலைவர் மீண்டும் முதலமைச்சர் நாற்காலியில் அமர வேண்டும் என்றால், இங்கே இருக்கக்கூடிய இரண்டு வேட்பாளர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் நீங்கள் வாக்களித்து, சட்டமன்றத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும். நாம் இன்று இத்தனை வாக்குறுதிகளைக் கொடுத்திருக்கிறோம். அவற்றை நாம்தான் செய்து கொடுப்போம் என்கிற நம்பிக்கை தமிழ்நாட்டு மக்களுக்கு நிறையவே இருக்கிறது” என்று குறிப்பிட்டார்.**

**கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:**

முதலில் சிறப்பான, எழுச்சியான வரவேற்பு அளித்திருக்கக்கூடிய உங்கள் அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களின் வரவேற்பையும், சிரித்த முகங்களையும் பார்க்கும் போது ஏற்கனவே நீங்கள் எல்லாம் ஒரு முடிவு செய்துவிட்டீர்கள் என்று தெரிகிறது.

வரும் 23–ஆம் தேதி உதயசூரியன் சின்னத்தில், திருப்பத்தூர் தொகுதியில் வேட்பாளர் அ.நல்லதம்பி அவர்களுக்கும், ஜோலார்பேட்டையில் சகோதரி கவிதா தண்டபாணி அவர்களுக்கும் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து, மிகப்பெரிய வெற்றியைத் தேடித்தர வேண்டும்.

### அதிகமான வாக்குகள் வித்தியாசம்

இன்று உங்களையெல்லாம் சந்தித்து, நம் சகோதரி கவிதா தண்டபாணி அவர்களுக்கும், திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி அண்ணன் நல்லதம்பி அவர்களுக்கு வாக்கு கேட்டு வருகை தந்துள்ளேன். அண்ணன் நல்லதம்பி அவர்களையும், சகோதரி கவிதா தண்டபாணி அவர்களையும் தலைவர் உங்களிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். கடந்த தேர்தலில் வெற்றியைத் தந்தீர்கள், இந்த முறை அதைவிட அதிகமான வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற வைத்து சட்டமன்றத்துக்கு அனுப்ப வேண்டும். கடந்த முறை பெற்ற வாக்கு வித்தியாசத்தை விட அதிகமான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற செய்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

நான் தொடர்ந்து இரண்டு நாட்களாக தமிழ்நாடு முழுவதும் பிரச்சாரத்தில் ஈடுபட்டுக்கொண்டு இருக்கிறேன். நானும் ஒரு வேட்பாளர், நானும் ஒரு தொகுதியில் நிற்கிறேன். இதுவரைக்கும் என் தொகுதிக்கே நான் போகவில்லை. நான் எனக்கு வாக்குக் கேட்கவே இல்லை. ஆனால், என் தொகுதிக்குப் செல்தற்கு முன்னால் இங்கே சகோதரி கவிதா தண்டபாணி அவர்களுக்கும், அண்ணன் நல்லதம்பி அவர்களுக்கும் வாக்குக் கேட்டு உங்கள் முன்னால் வந்து நிற்கிறேன். ஏனென்றால் என் வெற்றியை விட, இவர்கள் இருவரின் வெற்றி மிக மிக முக்கியமான வெற்றி. நீங்கள் அவர்கள் இருவரையும் வெற்றிபெற வைத்தீர்கள் என்றால் நம் தலைவரை வெற்றிபெற வைத்தது மாதிரி, என்னை வெற்றிபெற வைத்தது மாதிரி. அதனால்தான் உங்களையெல்லாம் தேடி வந்திருக்கிறேன்.

### வாக்குறுதிகள் நிறைவேற்றம்

நான் இரண்டு நாட்களாக மக்களைச் சந்தித்துக் கொண்டிருக்கிறேன். அதே மாதிரி நம் தலைவர் அவர்களும் இரண்டு நாட்களாக மக்களைச் சந்தித்து பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகிறார். எந்தத் தைரியத்தில் மீண்டும் மக்களை சந்திக்கிறோம்? கடந்த ஐந்து வருடமாகக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றி இருக்கிறோம். என்னென்ன தேர்தல் வாக்குறுதி சொன்னோமோ, அவற்றையெல்லாம் நிறேவேற்றியிருக்கிறோம் என்கிற நம்பிக்கையில் இன்று மக்களைச் சந்திக்கிறோம்.

உதாரணத்துக்குச் சில திட்டங்களை மட்டும் சொல்ல விரும்புகிறேன். நாம் ஆட்சிப் பொறுப்பேற்றதும் நம் தலைவர், முதலமைச்சர் ஆனவுடன் அவர் போட்ட முதல் கையெழுத்து `மகளிருக்கு விடியல் பயணத் திட்டம்’. ஒவ்வொரு மகளிரும் 900 ரூபாயிலிருந்து 1,000 ரூபாய் வரை இந்தத் திட்டத்தின் மூலம் சேமித்தார்கள்.

குழந்தைகள் பள்ளிக்கூடத்துக்கு வர வேண்டும், படிக்க வேண்டும் என்று அரசுப் பள்ளியில் ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை படிக்கக்கூடிய அனைத்துக் குழந்தைகளுக்கும் முதலமைச்சர் காலை உணவுத் திட்டம். தரமான உணவு, அதன் பிறகு தரமான கல்வி கொடுக்கப்பட்டது.

### கல்வி ஊக்கத் தொகை

அடுத்துக் கல்லூரிக்கு செல்று படிப்பதற்கு ஊக்குவிக்க ‘கல்வி ஊக்கத் தொகை’. அரசுப் பள்ளியில் படித்து, எந்தக் கல்லூரியில் சேர்ந்தாலும், தனியார் கல்லூரியாக இருந்தாலும் அவர்களுக்குக் கல்வி ஊக்கத்தொகையாக மாதம் 1,000 ரூபாய் நம் முதலமைச்சர் கொடுத்தார். கிட்டத்தட்ட 12 லட்சம் மாணவ மாணவிகள் இதில் பயன்பெற்றிருக்கிறார்கள்.

கடந்த மாதம் நம் தலைவர் முதலமைச்சர் 10 லட்சம் கல்லூரி மாணவ மாணவிகளுக்கு இலவச மடிக்கணினிகளையும் கொடுத்திருக்கிறார். ஒரே மாதத்தில் கொடுத்து முடித்தோம். இன்று அ.தி.மு.க ஒரு பொய்ப் பிரச்சாரத்தைச் செய்கிறார்கள், மடிக்கணினி கொடுக்கும் திட்டம், அ.தி.மு.க–வின் திட்டம் என்று சொல்கிறார்கள். அ.தி.மு.க ஆட்சியில் அவர்கள் பள்ளி படிக்கும் குழந்தைகளுக்கு மடிக்கணினி கொடுத்தார்கள். 2019–ஆம் ஆண்டே இந்தத் திட்டத்தை நிறுத்தி விட்டார்கள், அப்பொழுது அ.தி.மு.க ஆட்சி.

இன்று நம் முதலமைச்சர் அது பள்ளிக்கூடக் குழந்தைகளுக்குக் கொடுப்பதை விடக் கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினி கொடுத்தால், இன்னும் அவர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும், நாளை ஒரு வேலைக்குப் போவதற்கு, மேற்படிப்பு படிப்பதற்குப் பயனுள்ளதாக இருக்கும் என்று இன்று கல்லூரி மாணவர்களுக்கு 10 லட்சம் மடிக்கணினிகளை நம் முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்.

### மகளிர் உரிமைத் தொகை திட்டம்

இவை அனைத்தையும் விட மிகப்பெரிய ஒரு திட்டம், `கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம்’. கடந்த சட்டமன்றத் தேர்தலின் போது நாம் கொடுத்த வாக்குறுதி. மூன்று வருடமாக ஒரு கோடியே 31 லட்சம் மகளிருக்கு மாதம் 1,000 ரூபாய் உரிமைத் தொகையை நம் அரசு கொடுத்திருக்கிறது. அந்தத் திட்டத்தை எப்படியாவது நிறுத்த வேண்டும் என்று அ.தி.மு.க–வும் பா.ஜ.க–வும் திட்டம் போட்டார்கள். தேர்தலைக் காரணம் காட்டி மகளிர் உரிமைத் தொகையை நிறுத்த வேண்டும் என்று முயற்சி செய்தார்கள். ஆனால், நம் தலைவர் என்ன செய்தார்? நான் 1,000 ரூபாய் கொடுப்பதை நீ நிறுத்துகிறாயா? இப்போது நான் கொடுக்கிறேன் என்று சொல்லி 5,000 ரூபாய் கடந்த மாதம் கொடுத்தார்.

தேர்தல் வாக்குறுதி கொடுத்திருக்கிறோம். திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைந்த உடனே மகளிர் உரிமைத் தொகை 1,000 ரூபாயை உயர்த்தி 2,000 ரூபாய் தருகிறேன் என்று நம் தலைவர் வாக்குறுதி கொடுத்திருக்கிறார். நம் தலைவர் சொன்னால், நிச்சயம் செய்வார் என்கிற நம்பிக்கை இருக்கிறது.



**மீண்டும் திராவிட மாடல்**

**2.0 ஆட்சி!**

**பல திட்டங்களையும், கொடுத்திருக்கும் வாக்குறுதிகளையும் செய்துமுடிக்க வேண்டும் என்றால், வருகிற சட்டமன்றத் தேர்தலில், மீண்டும் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமையவேண்டும். நம் தலைவர் மீண்டும் முதலமைச்சர் நாற்காலியில் அமர வேண்டும் என்றால், இங்கே இருக்கக்கூடிய இரண்டு வேட்பாளர்களுக்கும் உதயசூரியன் சின்னத்தில் நீங்கள் வாக்களித்து, சட்டமன்றத்துக்கு அனுப்பிவைக்க வேண்டும்.**

### காலை உணவுத் திட்டம்

தமிழ்ப்புதல்வன், புதுமைப்பெண் திட்ட கல்வி ஊக்கத்தொகை 1,000 ரூபாயிலிருந்து 1,500–ஆக உயர்த்தித் தரப்படும். 10 லட்சம் பேருக்கு கலைஞர் கனவு இல்லத் திட்டத்தின் மூலம் புதிதாக வீடு கட்டிக் தரப்படும். 50 லட்சம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு தரப்படும். முதலமைச்சர் காலை உணவுத் திட்டம், நாம் மீண்டும் ஆட்சிக்கு வந்த உடனே எட்டாம் வகுப்பு வரை இலவச முதலமைச்சர் காலை உணவுத் திட்டம் விரிவாக்கம் செய்யப்படும் என்று வாக்குறுதி.

பல வாக்குறுதிகள் கொடுத்திருக்கிறோம். எல்லாவற்றையும்விட மிக மிக முக்கியமான வாக்குறுதி. மகளிர் உங்களுக்குத் தெரியும், அதுதான் `இல்லத்தரசி திட்டம்’. ஆட்சிப் பொறுப்பேற்ற உடனே முதலமைச்சர் ஆனவுடனே நம் தலைவர் மகளிருக்கு 8,000 ரூபாய் மதிப்புள்ள ஒரு கூப்பன் கொடுத்துவிடுவார். அந்தக் கூப்பனில் உங்கள் வீட்டுக்குத் தேவையான மின் சாதனப் பொருட்களை நீங்களே தேர்வு செய்து வாங்கிக்கொள்ளலாம். ஃபிரிட்ஜ், டிவி, குக்கர், வாஷிங் மெஷின் எதுவாக இருந்தாலும், 8,000 ரூபாய் மதிப்புள்ள பொருட்களை மகளிர் நீங்களே முடிவு செய்து வாங்கிக்கொள்ளலாம்.

### மீண்டும் திராவிட மாடல் 2.0 ஆட்சி

இப்படி பல திட்டங்களையும், கொடுத்திருக்கும் வாக்குறுதிகளையும் செய்துமுடிக்க வேண்டும் என்றால், வருகிற சட்டமன்றத் தேர்தலில், மீண்டும் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமையவேண்டும். நம் தலைவர் மீண்டும் முதலமைச்சர் நாற்காலியில் அமர வேண்டும் என்றால், இங்கே இருக்கக்கூடிய இரண்டு வேட்பாளர்களுக்கும் உதயசூரியன் சின்னத்தில் நீங்கள் வாக்களித்து, சட்டமன்றத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும். நாம் இன்று இத்தனை வாக்குறுதிகளைக் கொடுத்திருக்கிறோம். அவற்றை நாம்தான் செய்து கொடுப்போம் என்கிற நம்பிக்கை தமிழ்நாட்டு மக்களுக்கு நிறையவே இருக்கிறது.

நம் தலைவர் சொல்கிறார், இந்தச் சட்டமன்றத் தேர்தல் டெல்லி அணி *vs* தமிழ்நாடு அணி. டெல்லி அணியில் மோடி அவர்களும் அமித்ஷா அவர்களும் அவர்களின் அடிமைக் கூட்டம் எடப்பாடி பழனிசாமி அவர்களும் கூட்டணி போட்டு வந்திருக்கிறார்கள்.

எப்படி வந்தாலும் தமிழ்நாட்டுக்குள் நம்மை அனுமதிக்க மாட்டார்கள் என்று பா.ஜ.க–விற்குத் தெரியும். அதனால் இன்று அ.தி.மு.க–வை உடன் அழைத்துக்கொண்டு அவர்களின் போர்வையில் மீண்டும் தமிழ்நாட்டுக்குள் வர முயற்சி செய்கிறார்கள். தமிழ்நாட்டில் என்றைக்கும் பாசிச சங்கிக் கூட்டத்துக்கு அனுமதி கிடையாது. இந்த சட்டமன்றத் தேர்தல், தமிழ்நாடு *vs* டெல்லி தேர்தலில் மீண்டும் வெற்றிப்பெற போவது நம் தமிழ்நாடு தான். நம் தமிழ்நாடு என்றைக்கும் டெல்லிக்கு அவுட் ஆப் கண்ட்ரோல் தான் என்பதை டெல்லிக்குச் சொல்வோம். அதை மெய்ப்பித்துக் காட்ட வேண்டிய தேர்தல் இந்தத் தேர்தல்.

### மோடியின் முரட்டு அடிமை!

நீங்கள் எல்லாம் முரட்டுப் பக்தர்கள் பார்த்திருப்பீர்கள், முரட்டுத் தொண்டர்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள், எங்கேயாவது முரட்டு அடிமையைப் பார்த்திருக்கிறீர்களா?. இன்று இந்தியாவிலேயே மோடியின் முரட்டு அடிமை என்றால், எடப்பாடி பழனிசாமி அவர்கள். இதைச் சொன்னதற்கு நேற்று அவருக்குக் கோபம் வந்துவிட்டது. உதயநிதி என்னைப் பற்றி ரொம்பத் தரக்குறைவாகப் பேசுகிறார், கெட்ட வார்த்தையில் திட்டுகிறார் என்று.

நான் என்றைக்காவது அவரைத் திட்டி இருக்கிறேனா? மோடி திட்டின மாதிரி நான் திட்டி இருக்கிறேனா? இந்தத் தேர்தலில் தமிழ்நாட்டு மக்கள் நீங்கள் முடிவெடுத்துச் சொல்லுங்கள், பத்து தோல்வி பழனிசாமி இல்லை, மொத்தத் தோல்வி பழனிசாமி என்பதை முடித்துவிட வேண்டும். அதைச் செய்ய வேண்டிய நேரம், வருகிற சட்டமன்றத் தேர்தல்.

இங்கே இருக்கக்கூடிய மக்கள் நீங்கள் அனைவரும் உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும் என்று முடிவு செய்துவிட்டீர்கள். நான் உங்களிடம் கேட்டுக்கொள்வதெல்லாம், அடுத்த 22 நாட்கள் பிரச்சாரம் செய்யுங்கள். நம் கழக அரசின் சாதனைகள், திட்டங்கள், என்னென்ன வாக்குறுதி கொடுத்திருக்கிறோம், வெற்றி பெற்றால் என்னென்ன செய்வோம் என்பதை அடுத்த 22 நாட்கள் நீங்கள் தொகுதி முழுவதும் பிரச்சாரம் செய்யுங்கள்.

ஒவ்வொரு வாக்காளராகச் சந்தித்து என்னென்ன திட்டங்கள் இருக்கின்றன, மீண்டும் ஏன் நம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி அமைக்கவேண்டும் என்கிற பிரச்சாரத்தை நீங்கள் செய்ய வேண்டும். மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் சகோதரி கவிதா தண்டபாணி அவர்களையும், அண்ணன் நல்லதம்பி அவர்களையும் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து நீங்கள் வெற்றி பெற வைக்க வேண்டும்.

உங்களையெல்லாம் அன்போடு கேட்கிறேன், பண்போடு கேட்கிறேன், பாசத்தோடு கேட்கிறேன், உரிமையோடு கேட்கிறேன். உங்கள் வீட்டுப் பிள்ளையாக இருந்து கேட்கிறேன். இன்னும் பெருமையாக, பூரிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால், தலைவரின் மகனாக இருந்து கேட்கிறேன். முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரின் பேரனாக இருந்து கேட்கிறேன். உதயசூரியன் சின்னத்துக்கு ஆதரவு தாருங்கள். அண்ணன் நல்லதம்பி அவர்களையும், சகோதரி கவிதா தண்டபாணி அவர்களையும் பல்லாயிரக்கணக்கான வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற வைத்துச் சட்டமன்றத்துக்கு அனுப்புங்கள். உங்களுக்குத் தொகுதிக்குத் தேவையான அனைத்துத் திட்டங்களையும் அவர்கள் செய்து கொடுப்பார்கள்.

உங்களின் அன்புக்கும் வரவேற்புக்கும் நன்றி, நன்றி, நன்றி.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

திருப்பத்தூர் மாவட்டக் கழகச் செயலாளர் தேவராஜ், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, முன்னாள் மாவட்டக் கழகச் செயலாளர் முத்தமிழ்ச்செல்வி, மாவட்டத் துணைச் செயலாளர் சம்பத்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சத்தியமூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர்கள் சாமண்ணன், சத்தியநாராயணன், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் சூரியகுமார், அன்பழகன், சதீஷ்குமார், உமாகண்ரங்கம், அசோக்குமார், சுரேஷ்குமார், உமாசந்திரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வடிவேல், துணை அமைப்பாளர் செந்தில்குமார், தமிழ்மணி, நதீம், திருப்பத்தூர் மாவட்ட நிர்வாகிகள் ஜோதிராஜன், டி.கே.மோகன், செயற்குழு உறுப்பினர் ராஜமாணிக்கம், ரகுநாத், அரசு, தொகுதி பார்வையாளர் ரமேஷ், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர் ராஜேந்திரன், முருகேசன், குணசேகரன், மோகன்ராஜ், ராஜேந்திரன், கழக முன்னணியினர் மற்றும் கூட்டணிக் கட்சியினர் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.